பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 1 ஞாயிற்றுக்கிழமை 24.01.2021 கதிர் 311

## சுகாதார அமைச்சரின் கணவருக்கும் தொற்று

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் கணவர் காஞ்சன ஜெயரத்னவுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அவருடன் தொடர்புடையவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்த அதிகாரிகள் நேற்று மாலை முதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

2

# தமிழர் தலைநகர் திருமலையில் சுட்டுக்கொல்லப்பட்ட சுகிர்தராஜனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு



சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 'உதயன்' - 'சுடர் ஒளி' ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று மட்டக்களப்பிலுள்ள கிழக்கு ஊடகவியலாளர் அமையத்தில் நடைபெற்றது.

கடந்த 2006 இல் உயர்தரக் கல்வியை முடித்த பின்பு, பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருந்த 5 மாணவர்கள், திருகோணமலை, நிலாவெளி கடற்கரையில் வைத்து

2

## கோட்டாவின் ஆணைக்குழு ஏமாற்று வித்தை

# பொறுப்புக்கூறலை குழிதோண்டி புதைக்க இடமளிக்கவே முடியாது!

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் திட்டவட்டம்



**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்த முன்னைய விசாரணைக் குழுக்கள், ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பாக, ஆராய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள மூவர் கொண்ட விசாரணை ஆணைக்குழுவானது ஒரு ஏமாற்று வித்தையாகும்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

2

# இந்துக்களின் புராதன இடங்களில் வழிபாடுகள்: ஜனாதிபதி, பிரதமர் அனுமதியளிக்க வேண்டும்!

### சிவசேனை அமைப்பின் வன்னி மாவட்ட தலைவர் கோரிக்கை

இலங்கையில் இந்துக்களின் புராதன வழிபாட்டு இடங்களில் பூசை வழிபாடுகளை செய்வதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் அனுமதி வழங்க வேண்டும் என்று சிவசேனை அமைப்பின் வன்னி மாவட்ட தலைவர் அ. மாதவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியா நொச்சிமோட்டையில் அமைந்துள்ள அபிராமி அம்மன் ஆலயத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொல்லியல் திணைக்களம் புராதன இடங்களுக்கு சென்று அங்கு வழிபாடுகளை செய்வதற்கு தடை விதித்து வருகின்றது.

நாங்கள்வெறுமனேஆலயங்களில் மட்டும் வழிபட்டு வருபவர்கள் அல்லர், இங்குள்ள புராதான இடங்களிலும் வழிபட்டு வருகின்றோம். இந்நிலையில், புராதான இடமான

2

## பிரதமர் - சபாநாயகர் இன்று விசேட சந்திப்பு



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன இன்று காலை கொழும்பு 07, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

2



### ஆக்கிரமிப்புக்கு எதிராக

## அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்துப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும்வகையில்அனைத்துத்தரப்புகளையும் ஒன்றிணைத்த முக்கிய கலந்துரையாடல் இன்று நல்லூர் இளம் கலைஞர்

2

## கோட்டா அரசின் அராஜகங்களுக்கு எதிராக கினிகத்தேனையில் மாபெரும் போராட்டம்!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைக் கண்டித்து நுவரெலியா மாவட்டம் கினிகத்தேனை நகரில் இன்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சி போராட்டமொன்றை முன்னெடுத்தது.

'பேச்சு சுதந்திரத்தைப் பாதுகாப்போம்' எனும்

2

## காலம் கடத்துவது தேவையற்ற பிரச்சினைக்கு வழிவகுக்கும்!

### ஜனாஸா விடயம் தொடர்பில் அரசுக்கு திஸ்ஸ எச்சரிக்கை

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்யலாம் என்ற நிபுணர் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தாமல், காலம் தாழ்த்துவது தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

- இவ்வாறு வைரஸ் தொடர்பான விசேட நிபுணரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பிரதமர் – சபாநாயகர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது கொரோனா வைரஸ் சவாலை எதிர்கொண்டு எதிர்வரும் 9 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத் தொடரை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

சுகாதார வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு நாடாளுமன்றத்தின் சரியான செயற்பாட்டைப் பராமரிப்பதன் முக்கியத்துவத்தைப் பிரதமர், சபாநாயகரிடம் சுட்டிக்காட்டினார்.

## அனைத்துத் தரப்பின ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மதத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் என அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பது என்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு – கிழக்கில் தமிழரின் பாரம்பரிய இடங்கள் தொல்பொருள் ஆய்வு என்ற பெயரில் அபகரித்தல் மற்றும் காணி சுவீகரிப்புகள் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிராக செயற்பட்டு வாழ்வுரிமையைப் பாதுகாப்பது தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வீ.விக்னேஸ்வரனும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோட்டா அரசின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொனிப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் மஸ்கெலியா தொகுதி அமைப்பாளர் கபில நாகன்தல ஏற்பாடு செய்திருந்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவுக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் வெளியிடப்பட்ட கருத்துக்குக் கண்டனம் தெரிவித்த போராட்டக்காரர்கள், அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இதேவேளை, இந்த அரசு ஊடகங்களை அச்சுறுத்துகின்றது. அரசியல்வாதிகளுக்குக் கருத்து வெளியிடும் சுதந்திரம் இல்லை எனவும் போராட்டக்காரர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

## காலம் கடத்துவது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சோசலிச மக்கள் கட்சி கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விசேட வைரஸ் நிபுணர்களின் அறிக்கையை அரசால் நியமிக்கப்பட்டுள்ள குழுவுக்குச் சமர்ப்பிப்பதில் எவ்வித பயனும் இல்லை. அறிக்கையை ஆராயுமளவுக்கு அந்தக் குழுவில் வைரஸ் தொடர்பான நிபுணர்கள் இல்லை.

இலங்கையில் கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வதா? இல்லையா? என்ற பிரச்சினையை ஏற்படுத்தி, ஒரு சமூகத்தின் மத நம்பிக்கை அகௌரவப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு இந்த விடயத்தைத் தொடர்ந்தும் இழுத்தடிக்காமல், கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கான சுகாதார வழிகாட்டலொன்றை அறிமுகப்படுத்தி, அதற்கான அனுமதியை வழங்க வேண்டும் - என்றார்.

## இந்துக்களின் புராதன .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெடுக்குநாரி மலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பூசகர் கைது செய்யப்பட்டமை மிகவும் கண்டிக்கத்தக்கது என்று சிவசேனை அமைப்பின் வன்னி மாவட்ட தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

தொல்லியல் திணைக்களமானது கொடுப்பனவை பெற்றுக்கொண்டு செயற்படுகின்றது. ஆனால் நாங்கள் மண்ணை, மரத்தை, வழிபட்டு வருவதோடு நாங்கள் எந்தவித கொடுப்பனவும் இல்லாமல் எங்கள் புராதன இடங்களை பாதுகாத்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் உள்ள புராதன இடங்களை பாதுகாப்பது மட்டுமல்லாமல் எங்களது கலாசாரம் சார்ந்த விடயங்களை பாதுகாக்கும் நோக்குடனே எங்களது ஆலயங்களாக இருக்கட்டும் அல்லது அமைப்புக்களாக இருக்கட்டும், பரிபாலன சபைகள் அனைத்துமே செயற்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவிலே குறுந்தூர்மலையிலே ஆதிகாலம் தொட்டு ஆதிலிங்கேஸ்வரர் வழிபாடு முறைகள் இருந்து வருகின்றது.

ஆனால் தொல்பொருள் திணைக்களம் அங்கு சென்று வழிபாட்டு முறைகளிலே இருக்கக்கூடிய எங்களது வழிபாட்டு சின்னங்களை சிதைத்து இருப்பது கவலையளிக்கும் விடயமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே, ஜனாதிபதி மற்றும் பிரதமரும் நேரடியாக கவனித்து எங்களது வழிபாட்டு முறைகளை அறிந்த நீங்கள் எங்களது வழிபாட்டுக்காக அனைத்து ஆலயங்களிலும் சென்று வழிபடுவதற்கு அனைவருக்கும் சமத்துவமான உரிமையை வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## தமிழர் தலைநகர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆயுத தாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். படுகொலை செய்யப்பட்ட மாணவர்களை சுகிர்தராஜன் புகைப்படம் எடுத்து செய்தி வெளியிட்டிருந்தார்.

மாணவர்களின் இறப்புக்கு கைகுண்டுத் தாக்குதலே காரணம் என்று விசாரணையை திசைதிருப்ப அரசு முயற்சித்தபோது, இவர் எடுத்த புகைப்படங்கள் தலையில் சுடப்பட்டு இறந்ததை தெளிவாக எடுத்துக்காட்டின. இதனால் சர்வதேச ரீதியில் பல்வேறுபட்ட அழுத்தங்களை இலங்கை அரசு சந்தித்தது.

சுகிர்தராஜன் போர்ச்சூழலிலும் துணிச்சலுடன் ஊடகப் பணியாற்றியபோதே 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்துக்கு அருகாமையில் வைத்து ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு – குருமண்வெளியைப் பிறப்பிடமாகக்கொண்ட சுகிர்தராஜன் அம்பாறை, வீரமுனையில் வசித்துவந்த நிலையில் திருகோணமையில் பணி நிமித்தம் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரியநேந்திரன், சீ.யோகேஸ்வரன் மற்றும் மட்டக்களப்பு மாநகர மேயர் தி.சரவணபவன் உள்ளிட்ட அரசியல்வாதிகள், ஊடகத்துறை சமூகத்தினர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

## பொறுப்புக்கூறலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கை அரசு, தனது பொறுப்புக்கூறலைச் செய்யாது அதனைக் குழிதோண்டிப் புதைப்பதற்கே முயற்சிக்கின்றது. அதற்காகத் தமிழ் மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றுவதற்காக இவ்விதமான காலதாமதப்படும் செயற்பாடுகளைத் திட்டமிட்டு முன்னெடுக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சிவில் அமைப்புக்கள் என்பன கூட்டாக நிலைப்பாட்டை விபரித்து ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். மேலும் பொறுப்புக்கூறலைச் செய்விப்பதற்கும், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைப் பெற்றுக்கொள்வதற்குமான எமது முயற்சிகள் மேலும் தீவிரமாகத் தொடரும் என்பதையும் இலங்கை அரசுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயர்நீதிமன்ற நீதியரசர் நவாஸ் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மூவர் கொண்ட இந்த ஆணைக்குழுவில், முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஓய்வுபெற்ற மாவட்ட செயலாளர் நிமால் அபேசிறி ஆகியோரும் உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள், மனிதாபினமானச் சட்ட மீறல்கள் தொடர்பாக இற்றைவரையில் இலங்கை அரசு பொறுப்புக்கூறவில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது சம்பந்தமாக எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இலங்கையில் கடந்த காலங்களில் ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் என்பன இலங்கை அரசின் பொறுப்புக்கூறலைச் செய்வதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குமான சிபார்சுகளைச் செய்துள்ளன.

குறிப்பாக, 2010ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது பல்வேறு அமர்வுகளை நடத்தி 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி அதன் இறுதி அறிக்கையை அவரிடத்தில் சமர்ப்பித்தது. அதில் பல்வேறு விடயங்கள் சம்பந்தமான விடயங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம், 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், அந்தத் தருணங்களிலும் அதன் பின்னருமான காலத்தில் அந்த பரிந்துரைகள், தீர்மானங்கள் தொடர்பாக இலங்கை அரசு எவ்விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருக்கவில்லை.

இந்நிலையில்தான் ஜனாதிபதி கோட்டாபய பழைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை விசாரணை செய்வதற்குப் புதிய ஆணைக்குழுவொன்றை நியமித்திருக்கின்றார். இவ்வாறானதொரு ஆணைக்குழுவொன்று தற்போதைய சூழலில் தேவையற்றதொன்றாகும்.

இவ்வாறான ஆணைக்குழுவை நியமிப்பதன் மூலம் காலத்தைக் கடத்தலாம் என்று கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு எண்ணுகின்றது. பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகியன தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவது போன்று காண்பித்து தமிழ் மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றிவிடலாம் என்றும் இந்த அரசு கருதுகின்றது.

எம்மைப் பொறுத்தவரையில், புதிய விசாரணை ஆணைக்குழுவானது ஏமாற்று வித்தையாகும். அதற்கு எவ்விதமான பெறுமதியும் இல்லை. அதன் விசாரணைகளும், அறிக்கைகளும் எவ்விதமான பயனையும் தரப்போவதில்லை. அதன் மீது எமக்கு நம்பிக்கையும் இல்லை.

இலங்கை அரசைப் பொறுத்தவரையில் பொறுப்புக்கூறல் செயற்பாட்டை குழிதோண்டிப் புதைப்பதையே விரும்புகின்றது. அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. எமது மக்களுக்கான பொறுப்புக்கூறல் செய்யப்பட வேண்டும். அதில் எவ்விதமான விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை. அரசு புதிய விசாரணை ஆணைக்குழு போன்ற குறைபாடுடைய விடயங்களைப் பயன்படுத்தி தப்பித்து விட முடியாது. பொறுப்புக்கூறலைச் செய்வதற்கான எமது தீவிர செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறும் என்பதில் மாற்றமில்லை. -என்றார்.

## சுகாதார அமைச்சரின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தநிலையில், ஏற்கனவே தொற்றுக்குள்ளான அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தனிமைப்படுத்தப்பட்ட மையத்திற்கு சிகிச்சைக்காக நேற்று மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, சுகாதார அமைச்சக வளாகத்தில் உள்ள அவரது அலுவலகம் மூடப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சர்வதேசம் ஏமாளி அல்ல!

**யுத்தக் குற்றம் தொடர்பான பொறுப்புக் கூறல் விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினதும் அவரது அரசினதும் 'சுத்துமாத்து' நிலைப்பாட்டை – முகத்திரையை – கிழித்து அம்பலப்படுத்தியிருக்கின்றார் தென்னாபிரிக்காவின் இடைநிலை நீதி அதிகாரியும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான யஸ்மின் சூக்கா.**

***'விடிய, விடிய இராமாயணம், விடிந்த பின்னர் இராமன் சீதைக்கு என்ன முறை என்று கேட்டானாம்'* என்று ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.**

**இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புதிய ஆணைக்குழு ஒன்றை நியமித்தமைக்காகக் கூறிய காரணத்தைப் பார்த்தபோது இந்தப் பேச்சு மொழிதான் எமது நினைவுக்கு வருகின்றது.**

**நடந்தவை குறித்து ஒன்றும் தெரியாதவர் போல, புதிய விசாரணைக் குழு நியமித்து அவற்றைக் கண்டறியப் போகின்றாராம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

**யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மனித உரிமை மீறல்கள் உண்மையில் நாட்டில் இடம்பெற்றனவா என்பதைக் கடந்த கால விசாரணைகள், ஆணைக்குழுக்கள் வெளிப்படுத்தியுள்ளனவா என்பதை ஆறு மாத காலத்துக்குள் கண்டறிவதற்கே இப்போது புதிய ஆணைக்குழுவை நியமித்திருக்கின்றார் அவர்.**

**அதாவது இதுவரை விசாரணை நடத்தி பரிந்துரைகளைச் சமர்ப்பித்த குழுக்கள், கட்டமைப்புகளின் அறிக்கைகளைப் படித்து புதிய அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஓர் ஆணைக்குழு. அதற்குப் பூர்வாங்கமாக ஆறு மாத காலக்கெடு. அதுவும் பின்னர் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கப்படும் என்பது தெரியாது.**

**ஆக, எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் கழுத்துக்கு வரக் கூடிய சுருக்குக் கயிற்றை இளக்கி, தளர்த்தி, மேலும் கால அவகாசத்தைப் பெறுவதற்கான குறுக்கு வழி தந்திரோபாயம் இது என்பது அப்பட்டமாகத் தெரியும் உண்மை. இதனையே தெளிவான வார்த்தையில் வெளிப்படையாகக் கூறியிருக்கின்றார் யுத்தக் குற்றங்கள் மற்றும் நிலைமாறு கால நீதி ஆகியவற்றில் நிபுணரான யஸ்மின் சூக்கா அம்மையார்.**

***"மோசமான சர்வதேசக் குற்றங்கள் ஏதாவது இலங்கையில் புரியப்பட்டனவா என்பதை ஆராய்வதற்கு இன்னுமொரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை மிகவும் கேலிக்கூத்தானதாகவும், ஏமாற்றுத்தனமானதாகவும், பாதிக்கப்பட்டவர்களை அவமதிப்பதாகவும் உள்ளது. இந்த ஆணைக்குழு ஸ்தாபிதம் தெளிவற்றதும் காலத்தை இழுத்தடிக்கும் நோக்கத்தைக் கொண்டதுமாகும்"* என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார் யஸ்மின் சூக்கா.**

**கடைசி நேரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46 ஆவது அமர்வில் தமது நாட்டுக்கு ஏற்படக் கூடிய நெருக்கடிகளைச் சமாளிக்கும் கடைசி நேர குள்ளநரித் திட்டமாக, பழைய பல்லவியான ஆணைக்குழு நியமனம் என்ற தந்திரோபாயத்தைப் பிரயோகிக்க முயற்சிக்கின்றார் கோட்டாபயர்.**

***"இந்த ஆணைக்குழுவையும் அதன் அறிக்கையையும் சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ளப் போவதில்லை. இந்த ஆணைக்குழு நியமனத்தினால் அரசுக்கு எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை. இது கேலிக் கூத்து நடவழக்கை என்பது சர்வதேச சமூகத்துக்கு நன்கு தெரியும்"* என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கூறியமையும் கவனிக்கத்தக்கது.**

**தொடர்ந்தும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றும் இலங்கையின் போக்குக்கு இசைந்து ஏமாளியாகப் பார்த்திருப்பதற்கு சர்வதேச சமூகம் அப்படியொன்றும் விவரம் புரியாததல்ல. அது உரிய பிரதிபலிப்பை, உரிய வேளையில், உரிய முறையில், காட்டியே தீரும்.**

**இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் இடம்பெற்றமை தனக்கு தெரியாத விடயம் என்பது போல நடித்து, அது பற்றிய ஆராய ஆணைக்குழுக்களை நியமித்து கொழும்பு பாசாங்கு பண்ணலாம். தீக்கோழி தலையை மண்ணுக்குள் புதைத்து விட்டு தன்னையே மறைத்துக் கொண்டு விட்டதாக நம்புவது போல இலங்கையும் கற்பனை பண்ணிக் கொண்டிருக்கலாம்.**

**ஆனால், சர்வதேச சமூகத்துக்கு எல்லாம் தெரியும். இலங்கை தொடர்பான ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் இம்முறை மனித உரிமைகள் கவுன்ஸிலில் சமர்ப்பிக்கும் அறிக்கை யாவற்றையும் புட்டுப் புட்டு வைக்கும் என்பது நிச்சயமானது.**

**இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் என்று நம்பப்படுபவர்கள் தொடர்பில் உலக நாடுகள் பயணத் தடை, அவர்களின் சொத்துக்கள் முடக்கம் முதலிய இலக்கு வைத்த தண்டனை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தமது அறிக்கையில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையர் பரிந்துரைத்திருக்கின்றார் என்றும் தெரிகின்றது.**

**இந்த வகையில் ராஜபக்ஷக்களுக்கு வெளிநாட்டில் இருக்கக் கூடிய சொத்துக்கள் – குறிப்பாக 2019 வரை அமெரிக்கப் பிரஜையாகவிருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அமெரிக்காவில் இருக்கக் கூடிய சொத்துக்கள் கூட – இந்த ஏற்பாட்டின் கீழ் முடக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

## இலங்கையின் கொள்கை நிலைப்பாட்டுக்கு பொதுநலவாய நாடுகள் ஆதரவு வழங்கும்!

### தினேஷ் குணவர்த்தன நம்பிக்கை



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் கொள்கைகள் மற்றும் நிலைப்பாடுகளுக்கு பொதுநலவாய நாடுகள் ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருக்கிறார்.

இங்கிலாந்தின் தெற்காசிய மற்றும் மனித உரிமைகளுக்கான அமைச்சர் தாரிக் அஹமட் மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை தொலைபேசி வழிக் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது முக்கியமாகக் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் அமைச்சர் தினேஷ் குணவர்தன கடந்த சனிக்கிழமை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார்.

இந்தக் கலந்துரையாடலின் போது இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்கு உயர்நீதிமன்ற நீதிபதி நவாஸ் தலைமையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய விசேட ஆணைக்குழு தொடர்பில் தாரிக் அஹமட்டிடம் எடுத்துரைத்ததாக வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் உடல்களைக் கட்டாயமாகத் தகனம் செய்வதால் வெவ்வேறு நம்பிக்கைகளைக் கொண்ட குழுக்கள் மற்றும் நீதி ஆகியவற்றின் மீது ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலின் போது அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் எடுத்துக்கூறியதாக அமைச்சர் தாரிக் அஹமட் டுவிட்டரில் பதிவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். செம்பியன்பற்றில் துப்பாக்கி முனையில் மிரட்டி இளம் பெண்ணின் கழுத்தை அறுத்துக் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்.செம்பியன்பற்று வடக்கு, முனைப் பகுதியில் துப்பாக்கி முனையில் மிரட்டி பெண்ணின் கழுத்தை அறுத்து கொள்ளையிட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது சு. டேனுஜா (வயது 21) என்ற குடும்பப் பெண் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு எட்டு பேர் கொண்ட கும்பலொன்று தம்மை பொலிஸார் எனக் கூறி, வீட்டுக்குள் புகுந்து துப்பாக்கி முனையில் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த குடும்ப பெண்ணை அச்சுறுத்தியமையுடன், கழுத்தையும் அறுத்துள்ளனர்.

இதன்போது வீட்டில் இருந்த 25 பவுண் நகை மற்றும் 83 ஆயிரம் ரூபா பணத்தையும் அவர்கள் கொள்ளையடித்துள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 42 வயது மதிக்கத்தக்க நபரொருவர் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரிடம் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊஞ்சல் வலையில் சிக்குண்டு 8 வயது சிறுவன் பரிதாப சாவு!

### மட்டக்களப்பில் சோகம்

மட்டக்களப்பு – கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிழடித்தீவு பகுதியில் எட்டு வயது சிறுவன் ஒருவர், ஊஞ்சல் சீலையில் சிக்குண்டு உயிரிழந்த சோக சம்பவம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றுள்ளது.

மகிழடித்தீவு – கட்டுப்பத்தை என்னும் பகுதியிலுள்ள மனோகரன் கேதீசன் என்னும் எட்டு வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பாடசாலை விடுமுறை நாளான நேற்று, வீட்டின் அருகிலுள்ள மாமரத்தில் தாயாரின் சாறியொன்றை ஊஞ்சல் அமைத்து விளையாடுவதற்கு முற்பட்ட வேளையில் சேலையில் சிக்குண்டு இவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவனின் தாயார், மாடுகளை மேய்ப்பதற்காக சென்றுவிட்டு வீட்டுக்கு வந்துள்ளார். அதனைத் தொடர்ந்து சிறுவனை தேடியபோது, சீலையில் சிக்குண்ட நிலையில் இருந்தவரை மீட்டு மகிழடித்தீவு வைத்தியசாலைக்கு கொண்டுசென்றுள்ளனர்.

எனினும் குறித்த சிறுவன் ஏற்கனவே உயிரிழந்திருந்தான் என வைத்தியசாலையின் கடமை வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொக்கட்டிச்சோலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தமையுடன் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார், சடலத்தைப் பார்வையிட்டதுடன் மரண விசாரணையைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைகளுக்கான உத்தரவை பிறப்பித்தார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கைதிக்குத் தொலைபேசி வழங்கிய சிறை அதிகாரி!

சிறைக்கைதிக்கு தொலைபேசி வழங்கியமை தொடர்பில் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் அதிகாரியொருவர் பணி இடை நிறுத்தப்பட்டுள்ளார் என சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் கைதியொருவரிடமிருந்து மீட்கப்பட்ட தொலைபேசி தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது கைதி தனக்கு சிறைச்சாலை அதிகாரியொருவரே தொலைபேசியை வழங்கினார் எனத் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த விவகாரம் தொடர்பில் விளக்கமறியல் சிறைச்சாலையின் ஆணையாளரின் ஆலோசனைக்கமைய விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய சம்பந்தப்பட்ட அதிகாரி தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

# இஞ்சிக் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத இஞ்சிக் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை – 150/=





கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

# மணமகன் தேவை

யாழ் இந்து வேளாளர் குல 29 வயதுடைய இடபராசி செவ்வாய் இல்லாத பட்டதாரி அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்குப் பொருத்தமான மணமகன் தேவை.

074 043 8300

பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

# மரக் கன்றுகள் விற்பனைக்கு!

இயற்கை முறையில் பராமரிக்கப்பட்ட நல்ல தரமான மரக் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.




கற்பகவனம் விற்பனை நிலையம். 461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam) 021 492 7778

# யாழ் கலாலயா பயிற்சியகம்

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
வெளிநாடுகளுக்கு செல்ல இருக்கும் மங்கையரே!!
மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!!!

உங்களுக்கான 3 மாத கால பயன்மிகு பயிற்சிகள் 28.01.2021 தைப்பூசத்தன்று காலை 09.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

- கேக் ஐஸிங்
- கூந்தல் அலங்காரம்
- அழகுக்கலை (Makeup)
- Facial
- பல விதங்களில் சேலை அணியும் முறைகள்
- சிற்றுண்டிகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு உணவுகள் தயாரித்தல்.

- பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.
- இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்
- சனி – ஞாயிறு அல்லது கிழமை நாள் பிரிவில் இணையலாம்.

மேலும் விவரங்களுக்கு நேரில் வருகை தரவும்.

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) அங்கீகரிக்கப்பட்டது.

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் போதனா வைத்தியசாலையின் பின் வீதி)

சூடான அரசியல் மற்றும் சமூகம் சார் கட்டுரைகளுடன்

28 ஆவது இதழ்




மண் வாசம் தவழும் மாறுபட்ட கதைத் தொடர்கள்

கொழும்பு மற்றும் கிழக்கிலும்

அனைத்து முகவர்களிடமும் கேட்டு வாங்குங்கள்

வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்

# ட்ரம்பை பழிவாங்குவோம்; ஈரான் பகிரங்க மிரட்டல்!

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து கடந்த 2018 ஆம் ஆண்டு அமெரிக்கா வெளியேறியது முதல் இரு நாடுகளுக்கும் இடையில் மோதல் உருவானது.

இந்த சூழலில் கடந்த வருடம் ஜனவரி மாதம் ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்காவின் ஆளில்லா விமானம் நடத்திய வான் தாக்குதலில் ஈரான் இராணுவத் தளபதி காசி சுலைமானி கொல்லப்பட்டார். இதனால் இரு நாடுகளுக்கும் இடையில் தீராப்பகை உருவானது.



காசிம் சுலைமானி கொலைக்கு ட்ரம்ப் பதில் சொல்லியே ஆக வேண்டும் என ஈரான் ஏற்கனவே எச்சரித்துள்ளது.

இந்த நிலையில் ஈரான் இராணுவ தளபதி காசிம் சுலைமானி கொலைக்கு டிட்ரம்பை பழி வாங்குவோம் என ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலி காமெனி பகிரங்க மிரட்டல் விடுத்துள்ளார்.

அயத்துல்லா அலி காமெனியின் அதிகாரபூர்வ வலைதளத்தில், ட்ரம்ப் கோல்ப் விளையாடிக் கொண்டிருக்கையில் அவரது தலைக்கு மேல் போர் விமானம் பறப்பது போன்ற ஒரு புகைப் படம் பகிரப்பட்டிருக்கிறது. அந்த பதிவில் பழிவாங்கப்படுவது நிச்சயம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதேபோல் அயத்துல்லா அலி காமெனியுடன் தொடர்புடைய டுவிட்டர் கணக்கிலும் இந்த புகைப்படம் பகிரப்பட்டது அதில் சுலைமானியைக் கொன்றவர். இவர் தான் சுலைமானியை தாக்க உத்தரவிட்டார். ட்ரம்ப் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டும்" என பாரசீக மொழியில் கூறப்பட்டிருந்தது.

இதையடுத்து விதிமுறைகளை மீறியதாக கூறி அந்த டுவிட்டர் கணக்கை டுவிட்டர் நிறுவனம் நிரந்தரமாக முடக்கியது. அதேசமயம் இந்த டுவிட்டர் கணக்கு அயத்துல்லா அலி காமெனியுடையது இல்லை என்றும் போலியான டுவிட்டர் கணக்கு என்றும் டுவிட்டர் விளக்கமளித்துள்ளது.

## அண்டார்டிக்காவின் சிலி விமானப்படை தளம் அருகே சக்திவாய்ந்த நிலநடுக்கம்; சுனாமி எச்சரிக்கை

*அண்டார்டிக் பிரதேசத்தில் உள்ள தெற்கு ஷெட்லேண்ட் தீவுகளில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. சிலியின் விமானப்படை தளம் அருகே ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவில் 7.0 அலகாக பதிவாகியிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இந்த நிலநடுக்கம் காரணமாக சுனாமி உருவாக வாய்ப்பு உள்ளதாக சிலி தேசிய அவசரகால மீட்பு அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அண்டார்டிகா கடலோர பகுதியில் உள்ள சிலி இராணுவ தளத்தில் உள்ளவர்களை மீட்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் இராணுவ தளம் பகுதியில் உள்ளவர்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது.*

*சிலி நாட்டின் மிகப்பெரிய படையான விமானப்படையின் தளம் அண்டார்டிகாவில் உள்ளது. இங்கு வீரர்கள் தங்குவதற்காக குடியிருப்புகள் கொண்ட கிராமம், மருத்துவமனை, பள்ளி, வங்கி, தபால் அலுவலகம் மற்றும் வழிபாட்டு தலம் உள்ளது. இந்த கிராமத்தில் கோடை காலத்தில் 150 பேரும், குளிர்காலத்தில் 80 பேரும் வசிக்கின்றனர்.*

## சீன நிபந்தனையை ஏற்க மறுப்பு இந்தியாவிடம் மருந்து வாங்கும் வங்கதேசம்

சைனோவாக் தடுப்பு மருந்து சோதனைக்கான செலவைப் பகிர்ந்துகொள்ளச் சீனா கூறியதால், இந்தியாவிடமிருந்து தடுப்பு மருந்தை வங்கதேசம் வாங்கியுள்ளது.

இந்தியாவில் இருந்து வங்கதேசத்துக்கு 20 லட்சம் முறை செலுத்தும் கோவிஷீல்டு தடுப்பு மருந்து நன்கொடையாக அனுப்பப்பட்டுள்ளது.

இது தவிர 3 கோடி முறை செலுத்தும் அளவு மருந்தை சீரம் நிறுவனத்திடம் இருந்து விலைக்கு வாங்க வங்கதேசம் உடன்பாடு செய்துள்ளது.

சீனாவிடம் இருந்து மருந்தை வாங்கச் சோதனைக்கான செலவைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.



அதனால் சீனாவைத் தவிர்த்து இந்தியாவிடம் இருந்து மருந்தை வாங்க வங்கதேசம் முடிவு செய்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சீனாவில் பள்ளிக்குள் புகுந்து கத்திக்குத்து நடத்தியவர் சுட்டுக்கொலை

சீனாவில் அண்மைகாலமாக கத்திக்குத்து தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக பாடசாலைக்குள் புகுந்து கத்திக்குத்து தாக்குதல் நடத்துவது தொடர் கதையாகி வருகிறது. இந்த நிலையில் சீனாவின் தெற்குப் பகுதியில் யுன்னான் மாகாணம் குன்மிங் நகரில் உள்ள பாடசாலையில் நேற்றுக் காலை வழக்கம்போல் வகுப்புகள் நடைபெற்று கொண்டிருந்தது.

அப்போது அங்கு கையில் கத்தியுடன் வந்த நபர் ஒருவர் பள்ளிக் கூடத்துக்கு வெளியே நின்றுகொண்டிருந்தமாணவர்கள் சிலரை கத்தியால் சரமாரியாக குத்தினார். பின்னர் அவர் பாடசாலைக்குள் நுழைந்து கண்ணில் பட்டவர்களையெல்லாம் கத்தியால் குத்தினார்.

இதற்கிடையில் மாணவர்களின் அலறல் சத்தம் கேட்டு அந்த பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் உடனடியாக அங்கு விரைந்தனர். பொலிஸாரை பார்த்ததும் அந்த நபர் அங்கிருந்த ஒரு சிறுவனின் கழுத்தில் கத்தியை வைத்து அவனை பிணைக் கைதியாக பிடித்து வைத்துக் கொண்டார். இதையடுத்து சிறுவனை விட்டுவிட்டு தங்களிடம் சரணடைந்து விடும்படி அந்த நபரை பொலிஸார் எச்சரித்தனர். ஆனால் அந்த நபர் அதற்கு செவி சாய்க்கவில்லை.

இதனைத்தொடர்ந்து 'ஸ்னைப்பர்ஸ்' என்று அழைக்கப்படும் தொலைவிலிருந்து குறிபார்த்து சுடுவதில் திறமை வாய்ந்த பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் கத்திக்குத்து தாக்குதல் நடத்திய நபரின் நெற்றிப் பொட்டில் சுட்டு வீழ்த்தினர். இதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார். இதையடுத்து அந்த நபர் பிணைக்கைதியாக பிடித்துவைத்திருந்த மாணவரை பொலிஸார் உடனடியாக மீட்டனர். முதற்கட்ட விசாரணையில் தாக்குதல் நடத்திய அந்த நபர் 56 வயதான வாங் என்பது தெரியவந்துள்ளது. எனினும் இந்தத் தாக்குதலின் பின்னணி என்ன என்பது உடனடியாக தெரியவில்லை. இதுபற்றி விசாரணை நடந்து வருகிறது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1980.03.29
மதம் - இந்து V
நட்சத்திரம் - பூரம்
செவ் - ----
பாவம் - 42 1/4
கல்வி - A/L
தொழில் - சுவிஸ் PR
எதிர்பார்ப்பு - சுவிஸ் வர விரும்பும் பெண்

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1987.03.18
மதம் - இந்து V
நட்சத்திரம் - சித்திரை 01
செவ் - 2இல்
பாவம் - 27 1/2
கல்வி - கனடா பட்டதாரி
தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - கனடா வர மணமகன் தேவை

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

## அதிக சுவையான மீன்களில் சால்மன் மீன் டுபாயில் வருடத்திற்கு 1,000 தொன் மீன் உற்பத்தி


துபாய் ஜெபல் அலி மீன் பண்ணையின் தலைமை செயல் அதிகாரி பதர் முபாரக் கூறியதாவது:-

உலகின் அதிக சுவையான மீன்களில் சால்மன் மீன் (தமிழில் கிழங்கான் மீன்) முதன்மையான இடத்தை பிடித்துள்ளது. எமிரேட்ஸை பொறுத்தவரையில் 92 சதவீத சால்மன் மீன்கள் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. சால்மன் மீன் என்பது குளிர் பிரதேசங்களிலும், குறிப்பாக துருவ பகுதியிலும் அதிகமாக காணப்படும். சால்மன் மீன்கள் அதிகமாக ஐஸ்லாந்து, நோர்வே, சுவீடன், ஸ்காட்லாந்து, அலாஸ்கா உள்ளிட்ட பகுதிகளில் வாழ்ந்து வருகின்றன.

இவைகள் அட்லாண்டிக் சால்மன் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. டுபாயில் இந்த மீன்களை வளர்ப்பது மிக சவாலான ஒன்றாகும். அதற்கு காரணம் இங்கு நிலவும் வெப்பநிலை. அதிகமான சூட்டில் இந்த மீன்கள் உயிர் வாழ்வதில்லை.

இந்த மீன்களை டுபாயில் தகுந்த கட்டமைப்புகளுடன் உற்பத்தி செய்ய ஜப்பான் நாட்டில் உள்ள அம்பர்ஜாக் நிறுவனத்தின் ஒத்துழைப்பில் பட்டத்து இளவரசர் மேதகு ஷேக் ஹம்தான் பின் முகம்மது பின் ராஷித் அல் மக்தூமால் மீன் பண்ணை உருவாக்கப்பட்டது.

இந்த மீன் பண்ணையில் தற்போது 5 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் பிரமாண்ட தொட்டிகள் அமைக்கப்பட்டு அதில் கடல் நீர் நிரப்பப்பட்டுள்ளது. மேலும் அதில் குளிர்விப்பான்கள் மூலம் வெப்பநிலை பராமரிக்கப்பட்டு



வருகிறது. இங்குள்ள தொட்டிகள் 14 டிகிரி செல்சியஸ் முதல் அதிகபட்சமாக 27 டிகிரி வெப்பநிலையில் பரமாரிக்கப்பட்டு வருகிறது.

இந்த கடல் நீரானது வடிகட்டி சுத்தம் செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மீன்கள் இயற்கையாக கடலில் உள்ளதுபோல் ஆரோக்கியமானதாக வளர்கிறது.

அதற்காகவே ஸ்காட்லாந்து நாட்டில் உள்ள ஏரிகளை போன்ற தகவமைப்புகள் செயற்கையாக இந்த தொட்டிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இங்குள்ள மீன்களுக்கு இயற்கையான உணவுப்பொருள்களை கொடுப்பதன் மூலம், அதன் இறைச்சியும் சுவையாக உள்ளது.

தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள நவீன வசதிகளினால், ஆண்டுக்கு 1,000 தொன் எடையுள்ள மீன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இயற்கையாக பனிக்கடலில் வாழும் மீன்களை போன்று வளர்க்கப்படுவது இதன் முக்கிய சிறப்பம்சமாகும்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நாளை மறுநாள் பிரமாண்ட விவசாயிகள் பேரணி 2 லட்சம் டிராக்டர்கள் டெல்லிக்குள் நுழைகின்றன

## கிடைத்தது பொலிஸாரின் அனுமதி

மத்திய அரசு கொண்டு வந்த 3 விவசாய சட்டங்களை வாபஸ்பெற வேண்டும் என்று வலியுறுத்தி டெல்லியில் விவசாயிகள் 2 மாத காலமாக முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர மத்திய அரசு விவசாய பிரதிநிதிகளுடன் பலகட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியது. இறுதியாக நேற்று முன்தினம் 11 ஆவது கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதிலும் எந்த உடன்பாடும் ஏற்படவில்லை.

3 விவசாய சட்டங்களையும் 1/2 ஆண்டு நிறுத்தி வைக்க மத்திய அரசு முன்வந்தது. அதையும் விவசாயிகள் ஏற்க மறுத்து விட்டனர். 3 சட்டங்களையும் வாபஸ் பெற்றே தீர வேண்டும் என்று விவசாயிகள் பிடிவாதமாக உள்ளனர்.

விவசாயிகள் போராட்டத்தை மேலும் தீவிரமாக்கும் வகையில் வருகிற 26 ஆம் திகதி குடியரசு தினத்தன்று டெல்லியில் பிராமாண்ட டிராக்டர் பேரணி நடத்தப்போவதாக விவசாயிகள் ஏற்கனவே அறிவித்து இருந்தனர்.

டெல்லியில் குடியரசு தினத்தன்று மத்திய அரசு சார்பில் செங்கோட்டையில் விழா நடைபெறும். அதைத் தொடர்ந்து டெல்லி ராஜபாதையில் பிராமாண்ட அணி வகுப்பு நடைபெறும். இதற்கு போட்டியாக விவசாயிகள் டிராக்டர் பேரணியை நடத்த முடிவு செய்திருந்தனர்.

இதனால் குடியரசு தின விழாவுக்கு இடையூறு ஏற்படும், சட்டம் – ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என அரசு தரப்பில் கூறப்பட்டது.

இதனால் டிராக்டர் பேரணிக்கு தடை விதிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. ஆனால் சுப்ரீம் கோர்ட்டு இதில் தலையிட மறுத்து



விட்டது. டெல்லி பொலிஸாரே இது சம்பந்தமாக முடிவு செய்து கொள்ளலாம் என்று நீதிமன்றம் கூறிவிட்டது.

எனவே இது சம்பந்தமாக டெல்லி பொலிஸார் விவசாய சங்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். டெல்லிக்கு வெளியே பேரணியை நடத்திக்கொள்ளுங்கள் டெல்லி நகருக்குள் அனுமதிக்க முடியாது என்று பொலிஸார் கூறினார்கள்.

ஆனால் விவசாயிகள் டெல்லி நகருக்குள்தான் பேரணியை நடத்துவோம் என்று பிடிவாதமாக கூறினார்கள். முதலில் அரசு குடியரசு தின பேரணி நடைபெறும் ராஜ பாதையிலேயே டிராக்டர் பேரணியை நடத்த திட்டமிட்டு இருந்தனர்.

பின்னர் அதை டெல்லி ரிங்ரோடு பகுதிக்கு மாற்றுவதாக விவசாயிகள் அறிவித்தனர். ஆனாலும் டெல்லி நகருக்குள் பேரணி நடத்த அனுமதிக்க முடியாது என்று பொலிஸார் கூறிவந்தனர்.

விவசாயிகள் டெல்லி நகரை தவிர வேறு எங்கும் பேரணி நடத்த முடியாது என்று உறுதியாக கூறி விட்டனர்.

விவசாயிகள் சங்க பிரதிநிதிகளுடன் நேற்று டெல்லி பொலிஸார் 5 ஆவது கட்டமாக பேச்சு நடத்தினார்கள். இறுதியில் விவசாயிகள் டெல்லியில் பேரணி நடத்துவதற்கு அனுமதி கொடுத்தனர். எந்த வழியாக பேரணி செல்ல வேண்டும் என்பது தொடர்பாக இன்று பொலிஸார் ஆலோசனை நடத்துகிறார்கள். அதன்பிறகு பேரணி வழிகள் பற்றி தெரிவிக்கப்படும் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

பொலிஸ் அனுமதியை அடுத்து சிங்கு எல்லையில் விவசாயிகள் சங்கத்தினர் மீண்டும் கூடி ஆலோசனை நடத்தினார்கள். அப்போது எவ்வளவு தூரத்துக்கு பேரணி நடத்துவது, எந்த வழியாக பேரணி செல்வது என்று முடிவு செய்தனர்.

அதன்படி தற்போது விவசாயிகள் முகாமிட்டு இருக்கும் காசிப்பூர், சிங்கு, திக்ரி 3 எல்லைகள் வழியாக டெல்லிக்குள் நுழைவது. அதன்பிறகு 5 முனைகளில் இருந்தும் பேரணியை தொடங்குவது என்று முடிவு செய்தனர்.

சிங்கு, திக்ரி, காசிப்பூர், பல்வால், ஷாஜகான்பூர் ஆகிய 5 முனைகளில் இருந்தும் டிராக்டர்கள் டெல்லி நகருக்குள் செல்லும்.

மொத்தம் 100 கிலோ மீற்றர் தூரத்துக்கு ரோடு ஷோ நடைபெறும் என்று விவசாயிகள் சங்க தலைவர் யோகேந்திர யாதவ் கூறினார்.

மேலும் விவசாயிகள் சங்க தலைவர்கள் கூறியதாவது:-

இந்த பேரணியில் 2 லட்சம் டிராக்டர்கள் பங்கேற்கும். முதலில் இருந்ததைவிட இப்போது விவசாயிகள் எழுச்சியாக போராட்டத்தில் கலந்துகொண்டு வருகிறார்கள். குறிப்பாக இளைஞர்கள் மிக ஆர்வமாக உள்ளனர்.

இதனால் போராட்டத்துக்கு வருபவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நாங்கள் எதிர்பார்த்ததைவிட போராட்டத்துக்கு வரும் டிராக்டர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

டிராக்டர் பேரணி எவ்வளவு நேரம் நடக்கும் என்பதை சொல்ல முடியாது. 24 மணிநேரத்தில் இருந்து 72 மணிநேரம் வரை பேரணி நீடிக்க வாய்ப்பு உள்ளது.

பேரணியை ஒழுங்குபடுத்தவும், தேவையான உதவிகளை செய்யவும் 2,500 தன்னார்வலர்கள் பணியாற்ற உள்ளனர். பேரணியை வழிநடத்த கட்டுப்பாட்டு அறை ஒன்றும் அமைக்கப்படுகிறது.

டிராக்டர் பேரணி மிக அமைதியான முறையில் நடைபெறும். எந்த வன்முறைக்கும், தவறுகளுக்கும் இடம் இருக்காது. டிராக்டர்களில் விவசாயிகள் சங்க கொடி மற்றும் தேசிய கொடி கட்டப்பட்டு இருக்கும். வேறு கொடிகளுக்கு அனுமதி இல்லை.

பேரணியில் பங்கேற்போர் விவசாயிகள் வாழ்க, விவசாயிகள் இல்லை என்றால் உணவு இல்லை, 3 சட்டங்களை ரத்து செய், ஆகிய கோஷங்களை மட்டுமே எழுப்ப வேண்டும். போராட்டத்தில் பெண்களும் பெருமளவு பங்கேற்பார்கள்.

பேரணி முடிந்ததும் அனைத்து டிராக்டர்களும் எல்லைப் பகுதிக்கு திரும்பி விடும். டெல்லி நகருக்குள் யாரும் இருக்க மாட்டோம். பழைய முகாம்களுக்கே வந்து விடுவோம்.- என்றனர் தலைவர்கள்.

# பெற்றோல், டீசல் விலை உயர்வு அரசின் மீது ராகுல்காந்தி பாய்ச்சல்



பெற்றோல், டீசல் விலைகளை எண்ணை நிறுவனங்கள் நிர்ணயித்து வெளியிடுகின்றன. சமீப காலமாக பெற்றோல், டீசல் விலை உயர்ந்த வண்ணமாய் இருக்கிறது.

இந்த வாரத்தில் 4 ஆவது முறையாக பெற்றோல், டீசல்களின் விலையை எண்ணை நிறுவனங்கள் உயர்த்தி உள்ளன. இதனால் பெற்றோல், டீசல் விலை புதிய உச்சத்துக்கு சென்றுள்ளது. சென்னையில் பெற்றோல் விலை லீற்றருக்கு ரூ.88.29 ஆகவும், டீசல் ரூ.81.14 ஆகவும் உள்ளது.

பெற்றோல் விலை டெல்லியில் ரூ.85.70 ஆகவும், மும்பையில் ரூ.92.28 ஆகவும், டீசல் விலை டெல்லியில் ரூ.75.88 ஆகவும், மும்பையில் ரூ.82.66 ஆகவும் இருக்கிறது. பெற்றோலிய பொருள்களின் விலை உயர்வுக்கு காங்கிரஸ் எம்.பி. ராகுல் ரந்தி கண்டனம் தெரிவித்துள்ளார். எரிவாயு – டீசல் – பெற்றோல் விலையில் பிரதமர் மோடி மிகப்பெரிய வளர்ச்சியை காட்டியுள்ளார் என்று விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:-

பிரதமர் மோடி ஜி.டி.பி. யில் அதிக வளர்ச்சியை காட்டியுள்ளார். அதாவது ஜி.டி.பி. என்பது சமையல் எரிவாயு, டீசல், பெற்றோல் விலையில் மிகப்பெரிய வளர்ச்சியை காட்டியுள்ளார்.

பணவீக்கத்தால் மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். அதே நேரத்தில் மோடி அரசோ வரி வசூலில் மும்முரமாக உள்ளது.

# கொரோனாவை கட்டுப்படுத்துவதில் ஆதரவு அளித்துவரும் இந்தியாவுக்கு பாராட்டு

## உலக சுகாதார அமைப்பின் தலைவர்



இந்தியாவில் கோவிஷீல்டு மற்றும் கோவாக்சின் ஆகிய 2 தடுப்பூசி மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. இதில், கோவிஷீல்டு தடுப்பூசியை சீரம் இன்ஸ்டியூட் ஆப் இந்தியா நிறுவனம் உருவாக்கியுள்ளது. கோவாக்சின் தடுப்பூசியை பாரத் பயோடெக் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

கொரோனா தடுப்பூசி தயாரிக்கும் நாடுகளில் இந்தியா முன்னிலையில் உள்ளது. உலகின் மிகப்பெரிய கொரோனாத் தடுப்பூசி தயாரிப்பு நிறுவனம் இந்தியாவில் உள்ள சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா தான். இந்நிறுவனம் உலகின் பல நாடுகளுக்கும் கொரோனா தடுப்பூசி தயாரித்துக் கொடுக்க ஒப்பந்தம் செய்துள்ளது.

இதற்கிடையில், நல்லெண்ண அடிப்படையில் பிரேசில், பூட்டான், மாலைத்தீவுகள், வங்காளதேசம், நேபாளம், மியான்மர், செல்ஸ் ஆகிய நாடுகளுக்கு இந்தியா கொரோனா தடுப்பூசி வழங்கி வருகிறது. இந்தியாவின் இந்த செயலுக்கு பல நாடுகளும் வாழ்த்து தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், கொரோனாவை எதிர்கொள்வதில் இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் ஆதனாம் கூறுகையில், ‘கொரோனாவுக்கு எதிரான உலகலாவிய நடவடிக்கைக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும் இந்தியாவுக்கும், பிரதமர் மோடிக்கும் நன்றி. தகவல்களை பரிமாறிக்கொள்தல் மற்றும் இணைந்து செயல்படுதல் மூலமே இந்த வைரஸை தடுத்து மனித உயிர்களையும், வாழ்வாதாரத்தையும் காப்பாற்ற முடியும்’ என்றார்.


மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

# பொதுவாக்கெடுப்பை கோர இதுவே சரியான தருணம்!

## காணாமற்போனோர் உறவுகள் கோரிக்கை

தமிழர்களுக்கு பொதுசன வாக்கெடுப்பு தேவையென ஐ.நா., அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவிற்குச் சொல்ல இதுவே சிறந்த தருணம் என வவுனியாவில் போராட்டம் முன்னெடுத்துவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்தத் தருணத்தை நாம் தவறவிட்டால், வேறு சந்தர்ப்பங்கள் கிடைக்காது என நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில் -

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த எம்மை ஜனவரி 26, 2017 அன்று, அன்றைய பாதுகாப்புச் செயலாளர் ருவான் விஜயவர்த்தன பார்வையிட்டு 14 நாள்களுக்குள் தீர்வு வழங்கும் நிமித்தம் அலரி மாளிகையில் எங்களுடன் சந்திப்பொன்றை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

குறித்த சந்திப்பு 2017, பெப்ரவரி ஒன்பது அன்று அலரி மாளிகையில் நடைபெற்றது. சுமந்திரனின் பங்கேற்புக் காரணமாக அந்தப் பேச்சுகள் தோல்வியடைந்தன. ஆனால், இது திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட தந்திரமாகவே நாம் பார்த்திருந்தோம்.

அந்தவகையில், சாகும்வரை உண்ணாவிரதத்தை நிறுத்தி அலரிமாளிகைக்கு அழைத்து எங்களை ஏமாற்றி இன்றுடன் நான்கு ஆண்டுகள் ஆகின்றன.

இந்தச் சந்திப்பில், காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளை எங்களிடம் கொண்டு வாருங்கள், அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவியுங்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அகற்றுங்கள் போன்ற கோரிக்கைகளை நாங்கள் இலங்கை அரசாங்கத்திடம் முன்வைத்தோம். ஆனால், அதில் எதுவும் நடந்தேறாமல் நாம் ஏமாற்றப்பட்டோம்.

தந்தை செல்வாவைப் போல இலங்கையுடனான எந்தவொரு பேச்சும் பயனற்றது என்பதை நாங்கள் கண்டறிந்துள்ளோம். அதற்காகவே அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவை அழைக்க நாங்கள் முடிவு செய்ததற்கான காரணமாகும். எனவே, தமிழர்களின் தேவை பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட அரசியல் தீர்வு ஒன்றே.

கடந்த தேர்தலில், இரண்டு முக்கிய



தமிழ்க் கட்சிகள் பொதுசன வாக்கெடுப்புக்கு உறுதியளித்தன. ஆனால், இந்தக் கட்சிகளால் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அனுப்பப்பட்ட, பரிந்துரைக்கப்பட்ட யூ.என்.எச்.ஆர்.சி. தீர்மானத்தில் பொதுசன வாக்கெடுப்பை சேர்க்கத் தவறிவிட்டன. நமக்கு என்ன தேவை என்று கேட்க வேண்டுமே தவிர நாம் மற்றவர்களுக்கு செவிசாய்க்கக்கூடாது.

எங்களுக்கு வாக்கெடுப்பு தேவை என்று ஐ.நா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவுக்குச் சொல்ல இதுவே சிறந்த தருணம். இந்த நேரத்தை நாங்கள் தவறவிட்டால், வாக்கெடுப்புக் கோர வேறு எந்த நேரமும் எங்களுக்குக் கிடைக்குமோ தெரியாது.

தமிழ் அரசியல் கட்சிகள் தங்கள் கோரிக்கையில் வாக்கெடுப்பு என்ற விடயத்தைச் சேர்க்க மறுத்துவிட்டன என்பது ஒரு மர்மமாகும். தமிழர்கள் தாங்கள் அடிமை வர்க்கம் என்று நினைத்திருக்கும் வரை இலங்கையில் எதுவும் தமிழர்களுக்கு ஆதரவாக இருக்காது. - என்று குறிப்பிட்டுள்ளனர்.

# சுபவேளையில் திருமணம் பின்னர் தனிமைப்படுத்தல்!

## பருத்தித்துறையில் தம்பதிகளின் அவலம்

*பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில், வீட்டில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த மணப் பெண்ணுக்கு நேற்று (சனிக்கிழமை) குறிக்கப்பட்டிருந்த சுப வேளையில் திருமணம் நடத்திவைக்கப்பட்டது.*

*பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் வழிகாட்டலின் கீழ் பொதுச் சுகாதார பரிசோதகர், பொலிஸார் இணைந்து ஆலய முன்றிலில் வைத்து சுகாதார நடைமுறைகளின் சமய ஆசாரப்படி திருமண நிகழ்வு நடத்தப்பட்டது. அதன்பின்னர் புதுமணத் தம்பதியினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.*

*பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மையில் கொரோனா தொற்றாளர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவருடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.*

*இவ்வாறு சுயதனிமைப்படுத்தலில் உள்ள பெண்ணொருவருக்கு நேற்று (சனிக்கிழமை) திருமணத்துக்கு நாள் குறிக்கப்பட்டிருந்தது. அதனை முன்னிட்டு மணமகனின் குடும்பத்தால் கடந்த சில தினங்களுக்கு முன்பு பொன்னுருக்கு வைபவமும் நடத்தி முடிக்கப்பட்டிருந்தது.*

*இந்நிலையில், நேற்றைய திருமண நிகழ்வு தொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி, பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் வழிகாட்டலின் கீழ் நீதிமன்றுக்கு முன்பாகவுள்ள ஆலய முன்றிலில் மணமக்களுடன் நெருங்கிய உறவினர்கள் ஐந்து பேரின் பங்கேற்புடன் திருமண நிகழ்வு நடத்த நேற்று அனுமதியளிக்கப்பட்டது.*

*பொதுச் சுகாதார பரிசோதகர், பொலிஸாரின் கண்காணிப்பின் கீழ் சிவாச்சாரியார் ஒருவரால் இந்தத் திருமண நிகழ்வு நேற்று முற்பகல் இந்து சமய முறைப்படி நடத்திவைக்கப்பட்டது.*

*அதனைத் தொடர்ந்து புதுமணத் தம்பதி சுயதனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களிடம் எதிர்வரும் 28ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படும் என சுகாதார மருத்துவ அதிகாரியால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

# கோட்டாவின் ஆணைக்குழு கண்துடைப்பு நடவடிக்கை!

## வறுத்தெடுக்கின்றார் மனோ



இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் மார்ச் மாதம் கொண்டு வரவுள்ள பிரேரணையைச் சமாளிக்கும் வகையில், கண்துடைப்புக்காகவே புதிய ஆணைக்குழுவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பி.பி.சி. தமிழுக்கு வழங்கிய செவ்வியில் கருத்து வெளியிட்டுள்ள மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையைச் சமாளித்து, மீண்டும் கால அவகாசம் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திலேயே இந்தப் புதிய ஆணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராகக் கடும் தொல்லை தரும் சர்வதேச மேகங்கள் சூழ்கின்றமையினாலேயே, இலங்கை ஜனாதிபதி இவ்வாறான ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார்.

உள்நாட்டுக்குள்ளேயே தமிழ் மக்களின் மனங்களை வெல்லக் கூடிய செயற்பாட்டை இந்த அரசு முன்னெடுத்திருக்க வேண்டும்.

அதன் மூலமாக இலங்கை சிங்கள பௌத்த நாடு என்ற வரையறைக்கு அப்பால் சென்று, பல்லின, பல்மொழி, பன்மத நாடு என்ற அடிப்படையை இலங்கை அரசு முன்னெடுத்திருக்குமானால், இத்தகைய கடுமையான சர்வதேச நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிய தேவைப்பாடு இலங்கைக்கு இருந்திருக்காது.

இன்று நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடியான நிலைமைக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுதான் பொறுப்பை ஏற்க வேண்டும்.

அதனால், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்த ஆணைக்குழு ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகும்.

இதற்கு முன்னர் இலங்கையில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் கூட, கண்துடைப்பு ஆணைக் குழுக்களாகவே இருந்துள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதியில், அவரால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு, மிகச் சிறந்த, முற்போக்கான பரிந்துரைகளை முன்வைத்திருந்தது. அந்த பரிந்துரைகளை கூட அண்ணன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயற்படுத்தவில்லை.

இந்நிலையில், இன்று தம்பி ஜனாதிபதியிடம் அதனை எதிர்பார்க்கவே முடியாது. ஆகவே, இது கண்துடைப்பு என்பதே எனது உறுதியான நிலைப்பாடு. - என்றார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கட்டமைப்பை மீள் பரிசீலிக்குக!

## கோருகின்றது ஐ.நா.

இலங்கையில் குற்றவியல் நீதி அமைப்பு கவனிக்க வேண்டிய பிரச்சினைகளை ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக இலங்கையில் உள்ள குற்றவியல் நீதி அமைப்பு, பயங்கரவாத குற்றச்சாட்டு தொடர்பான விடயத்தை எதிர்கொள்ளும் போது மனித உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஆகவே குற்றவியல் நீதி அமைப்பு கவனிக்க வேண்டிய பின்வரும் பிரச்சினைகளையும் ஹனா சிங்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் முதலில் சட்டம், பயங்கரவாதத்தின் வரையறை மற்றும் வழக்குகளின் பின்னிணைப்பை நிவர்த்தி செய்வது உள்ளிட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கட்டமைப்பை மீளாய்வு செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தைத் தடுக்கும் நோக்கில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் அந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டவர்களுக்கு நியாயமான விசாரணை மற்றும் உரிய செயன்முறையை வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் பயங்கரவாத குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினரின் மீதும் பாகுபாடு காட்டுவது மற்றும் களங்கம் விளைவிப்பது போன்ற விடயங்களையும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதியாக, பயங்கரவாத செயற்பாட்டில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் அடிப்படையில், குற்றம் சாட்டப்பட்ட அல்லது தண்டிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வை வழங்குவதன் அவசியத்தையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.01.2021இல் வெளியிடப்பெற்றது.